TAMIL

# மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைக்கும் சேவைகள்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆங்கில மொழி பேசாதவர்களுக்கு அல்லது மொழிபெயர்ப்பு அல்லது மொழிபெயர்த்துரைக்கும் உதவி தேவைப்படுகின்றவர்களுக்கு மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைக்கும் சேவையை வழங்குகிறது (TIS)

அரசாங்க சேவை அல்லது சேவையை வழங்கும் நிறுவனம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாயின் இச் சேவை இலவசமாகும். திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மு.ப ௮.௩0 முதல் பி.ப ௫.00 வரை வழமையான அலுவலக நேரங்களில் IAA யுடன் தொடர்புகொள்வதற்கு TIS யைப் பயன்படுத்த பின்வருவனவற்றைச் செய்யுங்கள்.:

1. அவுஸ்திரேலியாவில் எங்கேயிருந்தும் 131 450 எனும் இலக்கத்தில் அழைக்கலாம்.
2. நீங்கள் பேசும் மொழியைத் தொலைபேசி இயக்குபவரிடம் சொல்லுங்கள். அவர் பொருத்தமான மொழிபெயர்த்துரைப்பாளருடன் இணைத்து விடுவார்
3. IAA யுடைய தொலைபேசி இலக்கத்தை இயக்குபவரிடம் சொல்லுங்கள். அவர் உங்களையும், IAA யுடைய மொழிபெயர்த்துரைப்பாளரையும் இணைத்து விடுவார்..

தொலைபேசி மொழிபெயர்த்துரைக்கும் சேவை ஒரு நாளில் ௨௪ மணித்தியாலங்களும், வாரத்தில் ௭ நாட்களும் கிடைக்கும்

TIS ஆவணங்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பதில்லை.

மேலதிக தகவல்களுக்கு http://www.tisnational.gov.au/ எனும் இணையத்திற்கு செல்லுங்கள்